**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF MAHILA COURT / ADDITIONAL SPECIAL COURT FOR EXCLUSIVE TRIAL OF CASES UNDER POCSO ACT,COIMBATORE.

S.C.No.97 of 2022

Prosecution witness - 5

| | | | |
|---|---|---|---|
| Name of Witness | PW-5 சுப்பிரமணியன் | Caste | |
| Father / Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.10.2023.

(எதிரி ஆஜர்.)

**முதல் விசாரணை-**

நான் தற்போது தேனி மாவட்டம், சின்னமனூர் காவல் நிலையத்தில் வட்ட காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 22.09.2019 அன்று ஆனைமலை காவல் நிலைய குற்ற எண் 315/2019 u/s 174(suspicious death)என்று அ.சா.1 இராமச்சந்திரன் கொடுத்த புகாரின் அடிப்படையில் சார்பு ஆய்வாளர் கருப்புசாமிபாண்டியன் அவர்களால் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த புகார் **அ.சா.ஆ.2.** கருப்புசாமிபாண்டியன் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3.** அ.சா.ஆ.2, அ.சா.ஆ.3 ன் அசல் பொள்ளாச்சி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு நகல் புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைக்கப்பட்டது. நகலை பெற்றுக் கொண்ட நான் அதே நாள் காலை 5.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஆறுமுகம், த/பெ பழனிச்சாமி, சண்முகஆனந்தம், த/பெ வெள்ளியங்கிரி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே **அ.சா.ஆ-4, அ.சா.ஆ.5.** அதன்பின்பு சாட்சிகள் இராமச்சந்திரன், சௌந்தர்யா, கிருஷ்ணசாமி, பத்மநாபன், முத்துமாணிக்கம், செல்வி, செந்தில்குமார், காளிமுத்து, குருவாயூரப்பன், ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு, வேட்டைகாரன்புதூரிலுள்ள அரசு மருத்துவமனை சென்று சவத்தின் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை நடத்தினேன். அந்த பிரேத

விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.6.** பின்னிட்டு சடலத்தை கோவை அரசு மருத்துவமனைக்கு எடுத்து செல்ல தலைமைக்காவலர் 1523 கோபால் என்பவர் மூலம் அனுப்பி வைத்தேன். பின்பு, சவக்கிடங்கில் சடலம் வைக்கப்பட்டது. டாக்டர்.சரவணப்பிரியா சவத்தின் மீது சடலக்கூறாய்வு செய்தார். சரவணப்பிரியா சடலத்தை பிரேத பரிசோதனை செய்து வழங்கிய சடலக்கூறாய்வு அறிக்கை **அ.சா.ஆ.7.** பின்பு, சடலத்திலுள்ள உள்ளுறுப்புகள் சேகரம் செய்யப்பட்டு கோயமுத்தூர் RFSL க்கு அனுப்பப்பட்டது. அந்த வேதியியல் பகுப்பாய்வு அறிக்கை **அ.சா.ஆ.8.** டாக்டர்.சரவணப்பிரியா கொடுத்த இறுதி கருத்துரை **அ.சா.ஆ.9.** பின்பு, அன்றைய தேதியே சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்து 324, 306 IPC ஆக மாற்றம் செய்தேன். அந்த சட்டப்பிரிவு மாற்று அறிக்கை **அ.சா.ஆ.10.** எதிரியை தேடி தகவலாளி கொடுத்த தகவலின் பேரில் தாத்தூர் பிரிவு பஸ் ஸ்டாப்பில் வைத்து எதிரியை 11.00 மணிக்கு கைது செய்து எதிரி தானாக முன் வந்து எந்த அச்சுறுத்தலும் இல்லாமல் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முருகானந்தம், நாகராஜ் ஆகியோர் முன்பு ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.11.** பின்பு சாட்சி முருகானந்தம், நாகராஜ், ஆகியோரோடு எதிரியை எதிரியின் வீட்டிற்கு அழைத்து சென்று பெல்ட் மற்றும் பக்கிள் கைப்பற்றினேன். அதற்கு ஒரு மகஜர் தயார் செய்தேன், சாட்சிகளிடமும் கையொப்பம் வாங்கினேன். அந்த கைப்பற்றுகை மகஜர் **அ.சா.ஆ.12.** பின்பு, எதிரியுடன் நிலையம் வந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த தக்க வழிக்காவலுடன் அனுப்பி வைத்தேன். பின்பு 24.09.2019 அன்று சாட்சிகள் தர்ஷன், விஜயதரண், சிவராமன், ராமசாமி, மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் சந்திரன் , தலைமைக்காவலர் கோபால் மற்றும் ராமச்சந்திரன், சௌந்தர்யா ஆகியோரிடம் மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். 10.10.2019 அன்று வழக்கின் தடயத்தை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1, பொள்ளாச்சி அவர்களுக்கு படிவம் 91 ன் மூலம் அனுப்பினேன். அந்த படிவம் 91, **அ.சா.ஆ.13.** பின்பு, சாட்சிகள் மருத்துவர் சரவணப்பிரியா, எஸ்.ஐ. கருப்புசாமி பாண்டியன், செந்தில்குமார் தலைமைக்காவலர் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 05.12.2020 அன்று இ.த.ச.324, 306 லிருந்து 498A சேர்த்து ஒரு சட்டமாற்று அறிக்கை தயார் செய்தேன். அந்த சட்ட மாற்று அறிக்கை **அ.சா.ஆ.14.** நான் கைப்பற்றிய பெல்ட் **சா.பொ.1,** பக்கிள் **சாபொ.2.** பின்பு 06.12.2020

அன்று புலன் விசாரணையை முடித்து எதிரி செந்தில்நாதன் மீது 324, 306, 498A இ.த.ச.வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை -**

இந்த வழக்கில் நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து அ.சா.1 இராமச்சந்திரன் புகார் கொடுக்க உதவி ஆய்வாளர் கருப்புசாமி பாண்டியன் வழக்கை பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2023 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17 ம் நாளன்று, 1969-ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச்சட்டம் 44/1969)-இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

சாட்சியின் கையொப்பம்

"என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

அமர்வு நீதிபதி,
மகிளா கோர்ட் / கூடுதல் சிறப்பு நீதிமன்றம்
(பாலியல் வன்முறையிலிருந்து குழந்தைகளை
பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் விசாரிக்கும்
சிறப்பு நீதிமன்றம்), கோயமுத்தூர்.

17/10/2023